# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்
# செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டம் (புதிய சந்தாதாரர்கள்)

## பொருள் காப்புறுதி

1. **செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டம் என்பது என்ன?**
   தகுதிபெறும் செய்தி கைக்கணினி சந்தாவுக்குப் பதிவு செய்த சந்தாதாரர்களுக்கு வழங்கப்படும் செய்தி கைக்கணினிக்கான இலவசக் காப்புறுதித் திட்டம் இது. செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டத்திற்கு கிரேட் ஈஸ்டர்ன் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட் நிறுவனம் எழுத்துறுதி அளிக்கிறது.

2. **செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டம் என்ன காப்புறுதி வழங்குகிறது?**
   இழப்பினால் அல்லது விபத்து, திடீர், எதிர்பார்க்கமுடியாத, எதிர்பாராத நிகழ்வுகளால் உங்கள் செய்தி கைக்கணினி இரண்டு (2) முறை பழுதுபார்க்கப்படும் அல்லது ஒரு (1) முறை மாற்றித் தரப்படும், உங்கள் கைக்கணினியின் காப்புறுதித் தொகையின் வரம்பு வரை.

| சாம்சங் கைக்கணினியின் மாடல் | மெமரி | காப்புறுதித் தொகை |
|---|---|---|
| Tab A 10.1 / 10.4 | 32GB Wifi<br>32GB LTE | S$398<br>S$498 |
| S6 Lite | 128GB Wifi<br>128GB LTE | S$598<br>S$698 |

   முழுமையான விதிமுறைகளும் நிபந்தனைகளும் அறிய காப்புறுதிக் கொள்கை வரிகளைப் பார்க்கவும்.

3. **வழங்கப்படும் காப்புறுதியின் காலகட்டம் என்ன?**
   உங்கள் செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டம் நடப்பிலிருக்கும் காலகட்டம், உங்கள் செய்தி கைக்கணினி சந்தாவின்படி, 24 மாதங்களாக அல்லது 30 மாதங்களாக இருக்கும்.
   எடுத்துக்காட்டாக, நீங்கள் 30 மாதகால செய்தி கைக்கணினி சந்தாவுக்குப் பதிவு செய்திருந்தால், உங்கள் காப்புறுதியின் காலகட்டம் 30 மாதங்களாக இருக்கும்.

## தகுதி நிபந்தனைகள்

1. **செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டத்திற்கு யாரெல்லாம் தகுதி பெறுவார்கள்?**
   18 வயதுக்கு மேலான சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள், வெளிநாட்டு ஊழியர்கள் அனைவரும் தகுதி பெறுவார்கள். இவர்கள் சிங்கப்பூரில் வசிப்பதோடு, சந்தா விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட கீழ்க்காணும் தேதியிலிருந்து குறைந்தது 24 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் வேலை அனுமதிச்சீட்டு அல்லது அட்டை வைத்திருக்கவேண்டும்.

| **வெளியீடு** | **காப்புறுதிக்குத் தகுதி பெறும் சந்தாக்களின் தொடக்கம்** |
|---|---|
| The Business Times News Tablet | **15 செப்டம்பர் 2020** |
| The Straits Times News Tablet | **1 டிசம்பர் 2020** |

| | |
|---|---|
| Chinese News Tablet | **1 டிசம்பர் 2020** |
| Berita Harian News Tablet | **1 டிசம்பர் 2020** |
| Tamil Murasu and The Straits Times News Tablet Bundle | **1 டிசம்பர் 2020** |

2. **காப்புறுதிக்கு நான் பணம் செலுத்த வேண்டுமா?**
உங்களது எஸ்பிஹெச் செய்தி சந்தாவுடன் கிடைக்கும் செய்தி கைக்கணினியின் காப்புறுதி இலவசமாக வழங்கப்படுகிறது. பணம் செலுத்த வேண்டியதில்லை.

3. **செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டத்தின் காப்புறுதி எப்போது தொடங்கும்?**
பொருள்மீட்பு ரசீதில் காட்டப்பட்டுள்ள பொருள்மீட்பு தேதிக்கு ஒரு (1) நாளுக்குப் பிறகு உங்கள் செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டம் நடப்புக்கு வரும்.

4. **காப்புறுதி காலகட்டத்திற்குப் பிறகு காப்புறுதியை நான் மேற்கொண்டு நீட்டிக்க முடியுமா?**
இல்லை, காப்புறுதி காலகட்டத்தின் முடிவில் காப்புறுதி காலாவதியாகிவிடும். அதனை நீட்டிக்க முடியாது.

5. **எனது கைக்கணினிக்குக் காப்புறுதி இருக்கிறதா என்பதை நான் எப்படி தெரிந்து கொள்வது? அதிகாரபூர்வ பத்திரங்கள் ஏதேனும் எனக்குத் தரப்படுமா?**
செய்தி கைக்கணினி சந்தா ஏற்கப்பட்டவுடன் எஸ்பிஹெச் உங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி வைக்கும். உங்கள் கைக்கணினியை மீட்பதற்கான விவரங்களும், செய்தி கைக்கணினி பாதுகாப்புத் திட்டத்தின் உறுதிப்பாடும் அதில் உள்ளடங்கியிருக்கும்.

6. **நான் வெளிநாட்டில் இருக்கும்போது எனது கைக்கணினி தொலைந்துவிட்டால், திருட்டுப்போனால், அல்லது தற்செயலாகச் சேதமடைந்தால் காப்புறுதி கோர முடியுமா?**
இல்லை, காப்புறுதி சிங்கப்பூரில் மட்டுமே செல்லுபடியாகும்.

## <u>கோரிக்கைகள்</u>

1. **நான் எத்தனை கோரிக்கைகளைத் தாக்கல் செய்யமுடியும்?**
காப்புறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு செய்தி கைக்கணினியும், காப்புறுதி நடப்பிலிருக்கும் காலகட்டத்தில், இரண்டு (2) பழுதுபார்ப்புகளுக்கு அல்லது ஒரு (1) மாற்றுக் கைக்கணினிக்கு மட்டுமே தகுதிபெறும். ஐயப்பாட்டைத் தவிர்க்க, உங்களது முதல் கோரிக்கை பழுதுபார்ப்பாக இருந்தால், நீங்கள் இன்னொரு பழுதுபார்ப்புக்கு மட்டுமே தகுதி பெறுவீர்கள், மாற்றுக் கைக்கணினிக்குத் தகுதி பெறமாட்டீர்கள்.
காப்புறுதி காலகட்டத்தில் ஏதேனும் கோரிக்கைக்கு நாங்கள் பணம் செலுத்தியிருந்தால், காப்புறுதித் தொகை (தேய்மானம் கழித்து) எஞ்சியிருக்கும் காப்புறுதி காலகட்டத்தில் கோரக்கூடிய தொகையிலிருந்து தானாகக் குறைக்கப்பட்டுவிடும்.

2. **நான் எவ்வாறு கோரிக்கை தாக்கல் செய்வது?**

சேதமடைந்த கைக்கணினியைப் பழுதுபார்க்க, சிங்கப்பூரில் உள்ள சாம்சங் சேவை நிலையத்திற்கு (கீழே பட்டியலிடப்பட்டுள்ளது) நீங்கள் செல்லவேண்டும்.

| | |
|---|---|
| SAMSUNG SERVICE CENTRE @ Plaza Singapura<br>68 Orchard Road #B2-23, Singapore 2388393<br>Operating Hours:<br>11:00am to 8:00pm (Monday - Saturday)<br>11:00am to 5:00pm<br>(Sunday and Public Holidays) | SAMSUNG SERVICE CENTRE @ VivoCity<br>1 Harbourfront Walk #02-28/29, Singapore 0985852<br>Operating Hours:<br>11:00am to 9:00pm<br>(Monday - Sunday and Public Holidays) |
| SAMSUNG SERVICE CENTRE @ Westgate<br>3 Gateway Drive #02-01, Singapore 6085324<br>Operating Hours:<br>11:00am to 8:00pm (Monday - Saturday)<br>11:00am to 5:00pm<br>(Sunday and Public Holidays) | SAMSUNG SERVICE CENTRE @ Causeway Point<br>1 Woodlands Square #01-01/02, Singapore 738099<br>Operating Hours:<br>11:00am to 9:00pm<br>(Monday - Sunday and Public Holidays) |

**A) சேதமடைந்த கைக்கணினிகளுக்கு:**

- சேதத்தைப் பற்றி பதினான்கு (14) நாட்களுக்குள் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் (wecare-sg@greateasternlife.com) என்ற மின்னஞ்சல் முகவரி வழியாகவோ அல்லது 1800 248 2888 என்ற வாடிக்கையாளர் சேவை எண்ணில் தொடர்புகொண்டோ தெரியப்படுத்தவேண்டும்.
- சேதமடைந்த உங்கள் கைக்கணினியைப் பழுதுபார்க்க, சிங்கப்பூரில் உள்ள சாம்சங் சேவை நிலையத்திற்குச் செல்லவேண்டும்.
- பழுதுபார்த்த பிறகு, பழுதுபார்ப்பு விவரங்களும் செலவும் உள்ளடங்கிய சேவை அறிக்கையை சாம்சங் சேவை நிலையம் உங்களுக்குத் தரும். பழுதுபார்ப்புக்கு நீங்கள் முதலில் பணம் செலுத்தவேண்டும்.
- பழுதுபார்க்கப்பட்டு முப்பது (30) நாட்களுக்குள் கோரிக்கை படிவத்தையும் சேவை அறிக்கையையும் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் தாக்கல் செய்து பணத்தைத் திரும்பப்பெற கோரிக்கை செய்யவேண்டும். பழுதுபார்ப்பு செலவில் 90% அல்லது உங்கள் கைக்கணினியின் காப்புறுதித் தொகை ஆகிய இரண்டில் எது குறைவோ அந்தத் தொகை உங்களுக்கு திருப்பி தரப்படும். மீதி 10% தொகையை நீங்கள் செலுத்துவீர்கள். இது மிகை கட்டணம் என்றறியப்படும்.

**B) பழுதுபார்க்க முடியாத அளவுக்குச் சேதமடைந்த கைக்கணினிகளுக்கு:**

- சேதத்தைப் பற்றி பதினான்கு (14) நாட்களுக்குள் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் (wecare-sg@greateasternlife.com) என்ற மின்னஞ்சல் முகவரி வழியாகவோ அல்லது 1800 248 2888 என்ற வாடிக்கையாளர் சேவை எண்ணில் தொடர்புகொண்டோ தெரியப்படுத்தவேண்டும்.
- சேதமடைந்த உங்கள் கைக்கணினியைப் பழுதுபார்க்க, சிங்கப்பூரில் உள்ள சாம்சங் சேவை நிலையத்திற்குச் செல்லவேண்டும்.
- பழுதுபார்க்க முடியாத அளவுக்குக் கைக்கணினி சேதமடைந்திருந்தால், சாம்சங் சேவை நிலையம் அதன் சேவை அறிக்கையில் அதற்குச் சான்றளிக்கும்.
- நீங்கள் மாற்றுக் கைக்கணினி வாங்குவதற்கு எஸ்பிஹெச் நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். கைக்கணினிக்கு நீங்கள் முதலில் பணம் செலுத்தவேண்டும்.
- சேதம் ஏற்பட்டு முப்பது (30) நாட்களுக்குள் கோரிக்கை படிவத்தையும் சேவை அறிக்கையையும், மாற்றுக் கைக்கணினி வாங்கியதற்கான ரசீதையும் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் தாக்கல் செய்து பணத்தைத் திரும்பப்பெற கோரிக்கை செய்யவேண்டும். மாற்றுக் கைக்கணினிகளைப்

பொறுத்தவரை, கைக்கணினி சேதமடைந்த சமயத்தில் அதற்கிருந்த மதிப்பு, மாதாந்தர அடிப்படையிலான 20 விழுக்காடு நேர்கோட்டுத் தேய்மானத்தின்வழி கணக்கிடப்படும். கைக்கணினியின் விலையில் 90% அல்லது உங்கள் கைக்கணினியின் காப்புறுதித் தொகை இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை திருப்பித் தரப்படும். மீதி 10% தொகையை நீங்கள் செலுத்துவீர்கள். இது மிகை கட்டணம் என்றறியப்படும்.

C) **<u>கொள்ளை அல்லது பலவந்தமான நுழைவினால் திருட்டுப்போகும் கைக்கணினிகளுக்கு:</u>**

- திருட்டு பற்றி காவல்துறையிடம் புகார் செய்து, புகாரின் நகலைப் பெறவேண்டும்.
- சேதத்தைப் பற்றி பதினான்கு (14) நாட்களுக்குள் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் (wecare-sg@greateasternlife.com) என்ற மின்னஞ்சல் முகவரி வழியாகவோ அல்லது 1800 248 2888 என்ற வாடிக்கையாளர் சேவை எண்ணில் தொடர்புகொண்டோ தெரியப்படுத்தவேண்டும்.
- மாற்றுக் கைக்கணினி வாங்குவதற்கு எஸ்பிஹெச் நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். கைக்கணினிக்கு நீங்கள் முதலில் பணம் செலுத்தவேண்டும்.
- முப்பது (30) நாட்களுக்குள் கோரிக்கை படிவத்தையும் காவல்துறையிடம் செய்த புகார் அறிக்கையையும், மாற்றுக் கைக்கணினி வாங்கியதற்கான ரசீதையும் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் தாக்கல் செய்து பணத்தைத் திரும்பப்பெற கோரிக்கை செய்யவேண்டும். மாற்றுக் கைக்கணினிகளைப் பொறுத்தவரை, கைக்கணினி இழக்கப்பட்ட சமயத்தில் அதற்கிருந்த மதிப்பு, மாதாந்திர அடிப்படையிலான வருடாந்திர 20 விழுக்காடு நேர்கோட்டுத் தேய்மானத்தின்வழி கணக்கிடப்படும். திகைக்கணினியின் விலையில் 90% அல்லது உங்கள் கைக்கணினியின் காப்புறுதித் தொகை இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை திருப்பித் தரப்படும். மீதி 10% தொகையை நீங்கள் செலுத்துவீர்கள். இது மிகை கட்டணம் என்றறியப்படும்.

கோரிக்கை படிவத்தை go.greateasternlife.com/sphtabnew இணையப்பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அனைத்து கோரிக்கைகளும் nonmotorclaims-sg@greateasterngeneral.com இணையப்பக்கத்தின்வழி கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்திடம் நேரடியாகத் தாக்கல் செய்யப்படவேண்டும்.

3. **எனது கைக்கணினியை வேறு எங்காவது பழுதுபார்க்கலாமா அல்லது மாற்றிப் பெறலாமா?**
இல்லை. சிங்கப்பூரில் உள்ள சாம்சங் சேவை நிலையத்தில் செய்யும் பழுதுபார்ப்புகளும் மாற்றீடுகளும் மட்டுமே கோரிக்கை செய்வதற்குத் தகுதிபெறும்.

**<u>மற்றவை</u>**

1. **கூடுதல் தகவல்களைப் பெற யாரை அணுகுவது?**
நீங்கள் +65 6248 2888 என்ற தொலைபேசி எண்ணில் கிரேட் ஈஸ்டர்ன் நிறுவனத்தை அழைக்கலாம் (காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி). அல்லது wecare-sg@greateasternlife.com முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

நாங்கள் வழங்கும் தயாரிப்புகள் பற்றி மேலும் தெரிந்துகொள்ள, அன்புகூர்ந்து www.greateasterngeneral.com இணையப்பக்கத்திற்குச் செல்லுங்கள்.

## முக்கிய குறிப்புகள்

இது காப்புறுதித் திட்டம் பற்றி சுருக்கமாக விவரமளிக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மட்டுமே, காப்புறுதி ஒப்பந்தம் அல்ல. காப்புறுதித் திட்டத்தின் துல்லியமான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் அறிய காப்புறுதித் திட்டப் பத்திரத்தைப் பார்க்கவும்.

இந்த அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளில் கிடைக்கும். ஆங்கிலப் பதிப்புக்கும் மற்ற மொழிபெயர்ப்புகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் ஆங்கிலப் பதிப்பே எப்போதும் மேலோங்கி இருக்கும்.